முருகப்பெருமான் துணை

**கொடை வள்ளல் மகான் அல்லமாபிரபு அருளிய அறிவுரை ஆசி நூல்**

**காயசித்தி மூலிகை நூல் பாகம்-2**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.05.2023**, வெள்ளிக்கிழமை

1. அறமாக வந்த அண்ணலே
அரங்கனே ஞான வள்ளலே
வரமாக நீ தருகின்ற உபதேசம்
வளமாக்கும் வையகத்தை எனக்கூறி
2. கூறியே சோபகிருது தகர் திங்கள்
குறைவிலா இருபானீர் திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 22 ம் நாள், 05.05.2023, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசமக்களுக்கு அல்லமாபிரபு யானும்
3. யானுரைக்க பந்தபாசப் பற்றில்
உயிர் காக்கும் மாயைப் பற்றில்
ஞான வழிமறந்து தேகமிழைத்து
நாடிதளர்ந்து நரைதிரை கண்டு
4. கண்டுமே நசிந்து மடிந்து பிறந்து
கலியினில் தொடர் பிறப்பினை
உண்டாக்கி உழலும் மானிடரே
உண்மைதனை இன்று உங்களுக்குரைப்பேன்
5. உரைக்கவே இனி பிறவாமைக்கு
உடலுக்கு நரைதிரை மூப்புவாரா
வருங்காலம் பாதுகாப்பாய் மாற
வந்த நோக்கம் அறிந்து தெளிய
6. தெளியவே அரங்கன் காட்டும்
தெய்வ நெறியாம் ஞானிகள் பூசை
அழியாமைபெற வேண்டியே
அவரவரும் அனுதினமும் செய்ய வேண்டும்
7. வேண்டி முருகப்பெருமான் வழிபாடு
விடாது செய்து வருவதுடன்
உண்டான உயிர்கொலை நீக்கி
உத்தமமான சைவநெறி கடை பிடிக்கவேண்டும்

8. வேண்டியே உடல் தூய்மைக்கான
வினவிட உணவு முறை சரிசெய்து
கொண்டுரைக்க மனம் தூய்மைபெற
குருமார்கள் ஞான நூல்களை

9. நூல்களை கற்றுவர வேணும்
நாட்டிட செயல் வடிவம் பெற
நல்விதமாய் அரங்கன் தரும
நற்காரியச் சேவைதனில் கலந்து

10. கலந்துமே தொண்டாற்றியே
கட்டாயம் தருமத்தில் உதவி
பலந்தரும் குருமருந்தாம் இனிதே
பாடிடுவேன் சிவசக்தி மூலிகை

11. மூலிகை காலை உண்டுவர
முருகப் பெருமானை வணங்கிவர
காலனை வென்று இனிபிறவா
கல்பஞான தேகமாக்கி நிலைப்பர்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமானை பூஜித்து குருமருந்தாம் சிவசக்தி மூலிகையை உண்டுவர வேண்டும்.